**OS.No.463/2024, Dated 20.11.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 20th day of November 2025.

**பி.வா.சா.2 – தேவேந்திரன் த/பெ. தங்கவேலு வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது பூர்வீகம் தேசூர் ஆகும். நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். நான் எலக்ட்டிரிஷனாக வேலை செய்கிறேன். பிரதிவாதி எனது உறவினர் மற்றும் நண்பர ஆவார். வாதியின் பெயர் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. வாதியும தேசூரைச்சேர்ந்தவர் தான். தற்சமயம் சென்னையில் வசிக்கிறார். தேசூரில் மின்சார அலுவலகத்திற்கு பின்புறம் அவரது வீடு உள்ளது. அந்த தெரு பெயர் கோட்டை தெரு ஆகும். 2015ம் ஆண்டு பிரதிவாதி அவருக்கு சொந்தமான சொத்தை ரூ.2,00,000/-க்கு அடமானம் செய்து எழுதி கொடுத்த அடமான பத்திரத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த அடமான பத்திரத்திற்கான பத்திர எழுத்தர் மற்றும் சாட்சிகளை பிரதிவாதி தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த அடமான பத்திரத்தில் நானும், வாதியின் அண்ணனும் சாட்சியாக கையெழுத்து போட்டோம். அவர் வாதியின் உடன் பிறந்த அண்ணன் ஆவார். மேற்சொன்ன சாட்சியான சௌந்தருக்கும், வாதிக்கும் இடையே சொத்து பிரச்சனை சம்பந்தமாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். அடமானம் ஏற்பட்ட போது சௌந்தரும் வாதியும் பேச்சு வார்த்தையில் தான் இருந்தார்கள். அதன்பின்னிட்டு தான் அவர்களிடையே பிரச்சனை ஏற்பட்டது. பிரதிவாதி எவ்வளவு ரூபாய் வட்டி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. எத்தனை மாதங்களுக்கு வட்டி கொடுத்தார் என்ற விபரமும் எனக்கு தெரியாது. எவ்வளவு வட்டிக்கு கடன் கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. என் முன்பு வைத்து தான் பணம் கொடுக்கப்பட்டது.

ரூ.1,50,000/- தான் கடன் கொடுத்தார் என்பதற்கு புகார் ஏதாவது கொடுத்தோமா என்றால் இல்லை. அடமான பத்திரத்தில உள்ள விபரங்களை நாங்கள் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். எந்த தேதியில் எங்கு வைத்து பணத்தை திருப்பி கொடுத்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எவ்வளவு ரூபாய் பணம் கொடுத்தார் என்றும் எனக்கு தெரியவில்லை. பணம் திருப்பி கொடுத்ததாக தற்போது தான் என்னிடம் சொல்லி சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான். என்னிடம் சொல்லிவிட்டு தான் பணம் கொடுக்க சென்றார். பிரதிவாதி எனது நண்பர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. சௌந்தராஜனுக்கும், வாதிக்கும் முன் பகை உள்ளதால் வாதியை ஏமாற்றும் நோக்குடன் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சென்னைக்கு சென்று பணத்தை திருப்பி கொடுக்க போவதாகதான் என்னிடம் கூறி சென்றார்கள். நான் சொல்வது போல் ரூ.1,50,000/- மட்டும் தான் கடன் வாங்கியிருந்தால் அது சம்பதந்தமாக நாங்கள் புகார் கொடுத்திருப்போம் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அடமானம் பத்திரம் மட்டும் தான் அன்றைய தினம் எழுதி கொடுத்தார். காசோலை மற்றும் பிரமிசரி நோட்டுக்கள் எழுதிக்கொடுக்கவில்லை. பிரதிவாதி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்லா. பிரதிவாதி வட்டியுடன் கடனை திருப்பி செலுத்த கடமை பட்டவர் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.11.19 06:30:54 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்